**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.20
https://ngmtamil.in/

# ரால்ப் வால்டோ எமர்சனின் "சுயசார்பு" கோட்பாடுகளில் திருக்குறள் கருத்துகள்

**முனைவர் நீ.பகவதியம்மாள்**
தமிழ்த்துறை இணைப்பேராசிரியர், பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்-641014
9787410791, bhagavathiammal@psgcas.ac.in

**முன்னுரை**

மனமெனும் மாயக்கருவிற்குள் மனிதனின் ஐம்புலக் கருவிகள் இயங்கி இயைந்து வாழுகின்றது. இந்த வாழ்வியலை உணர காலம் இயற்கைகளை அழித்தும் அளித்தும் இன்பதுன்பக் காட்சிகளின் நினைவுகளை நம்மோடு படரவிட்டிருக்கின்றது.மனிதன் தன்னைக்கொண்டே தன்னை வடிவமைத்திருக்கின்றான். தமிழ் இலக்கியங்களில் இயற்கை பற்றிய நகர்வுகள் மனித மன நிலைகளில் கூடுதல் அறிவையும் அழகியலையும் செவ்வியல் தன்மையோடு விளக்கியிருக்கின்றன.பூக்களைப் பற்றிப் பேசாத தமிழ் இலக்கியங்களே இல்லை என்னுமளவிற்குப் பூக்கள் தமிழ் இலக்கியப்பரப்பில் விரிந்து கிடக்கின்றன. இறைவனைப் பூக்கள் வைத்து வழிபடும் மரபு தமிழரிடமிருந்துதான் ஆரியரிடம் சென்றிருக்க வேண்டும்.

"சிறுதெய்வங்கள் பலவற்றை மகிழ்ச்சியூட்ட உயிர்களைப் பலியிடும் வேள்விகளே அவர்களது வழிபாட்டு முறை.பூ,பூசை,பூசன் என்ற சொற்களெல்லாம் தமிழிலிருந்தே வடமொழிக்குச் சென்றன. முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனும் திணைப்பாகுபாடுகளுக்கு மலர்களின் பெயர்கள் சூட்டப்பட்டிருப்பதும் ஒவ்வொரு திணைக்குரிய கருப்பொருள்களிலும் மரங்கள் சேர்க்கப்பட்டிருப்பதும் இதனை உணர்த்தும்".தமிழ் அழகியல் உலகளாவிய ஒப்பு நோக்கு

தமிழிலக்கியங்கள் அறத்தை மையமாக வைத்து கட்டமைக்கப்பட்டுள்ளது. அறம் எனபதன் உயரிய நோக்குக்கு வழிகாட்டும் இயற்கை சார்ந்த வாழ்வியலின் நெறிமுறைகளைத் தற்சார்புக்கோட்பாடுகளாக வறையறுப்பதே இவ்வாய்வின் நொக்கமாகும்.

**<u>தற்சார்புக்கோட்பாடுகள் விளக்கம்:</u>**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**ஆளிமையின் இலக்கணம்:**

சுய பொருளாதார நிலையின் தோற்றுவாயாகவும் நாட்டின் சுதந்திர வளர்ச்சியின் நெறியாகவும் வளர்ந்ததே தற்சார்புக்கோட்பாடு ஆகும். உற்பத்தியின் முதல் நிறுவனமாக ஒரு நாடும் அந்நாட்டு மக்களுமே விளங்க வேண்டும் என்பதே இக்கோட்பாட்டின் கருதுகோளாகும். பொருளாதார நிலைக்குச் சொந்தமான இக்கோட்பாட்டை இயற்கை சார்ந்த வாழ்வியல் அறங்களோடு பொருத்துவதற்கான கருத்தியல் ஊடகமாகத் திருக்குறளை அடையாளம் காணலாம். பிறப்படிப்படையில் பெண்மையின் பிரசவக்கூட்டிலிருந்து மனித உருவங்கள் படைக்கப்பட்டிருப்பினும் மனிதனை மனிதன் வேறுபடுத்துவதற்கான உடல் மற்றும் செயல் முறைகளை இயற்கை வழிப்படுத்தியிருப்பதுதான் வாழ்வியல் ஆகும்.

” “எல்லா மனிதர்களும் உள்ளார்ந்த சுதந்திரத்தோடும் மாண்போடும் உரிமைகளோடும் சமத்துவத்தோடும் பிறக்கின்றனர்.எனவே ஒருவருக்கொருவர் மதித்து வாழ வேண்டியது அவர்தம் கடமையாகும்” என்கிறது சர்வதேச மனித உரிமை சாசனம் இதனை வள்ளுவம்

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்” குறள் – 972

இறைவன் மனிதனை உயிர்க்க உலக சக்தியையே படைப்பாக்கப் பொருளாகப் படைத்துள்ளான்.பஞ்சபூதங்களே உயிக்கூடான இந்த உடலாகும்.

"தற்சார்பு" என்பது 1841 ஆம் ஆண்டு அமெரிக்க ஆழ்நிலை தத்துவஞானி ரால்ப் வால்டோ எமர்சன் எழுதிய ஒரு கட்டுரையாகும்.

எமர்சன் கூறிய சுயசார்புக் கோட்பாடுகள்

- உங்களை நம்புங்கள்
- “பின்பற்றுதல் என்பது தற்கொலை”
- இணக்கமின்மை
- தனித்துவம்
- போலியாக்கத்தை நிராகரித்தல்
- இயற்கையும் உள் வழிகாட்டுதலும்

<u>உங்களை நம்புங்கள்</u>

எமர்சன் சான்றோர்களுக்கான வரையறையை ”உன் சொந்த சிந்தனையை நம்பு, உன் தனிப்பட்ட இதயத்தில் உனக்குத் தோன்றும் அறமான அனைத்தும் எல்லா மனிதர்களுக்கும் அறமானதாகத்தான் இருக்கும் என்று நம்பிக்கை கொள்” இந்த குணத்தை அவர் சமீபத்தில் ஒரு சிறந்த ஓவியர் எழுதிய ஒரு கவிதையில் கண்டதாக எமர்சன் கூறுகிறார்.

“believe your own thought, to believe that what is true for you
in your private heart is true for all men”

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

எமர்சன் "உங்கள் சொந்த சிந்தனையை நம்புவது, உங்கள் தனிப்பட்ட இதயத்தில் உங்களுக்கு உண்மையாக இருப்பது, எல்லா மனிதர்களுக்கும் உண்மை பொது என்று நம்புவது-அதுதான் மேதை" என்ற கூற்றுடன் தொடங்குகிறார். அவரது கூற்று "தன்னம்பிக்கை" என்பதன் சாராம்சத்தைப் பிடிக்கிறது, அதாவது ஒருவரின் சொந்த எண்ணங்கள் மற்றும் கருத்துக்களை நம்பியிருப்பது. மோசே, பிளேட்டோ மற்றும் மில்டன் போன்ற தனிநபர்கள், அவர்கள் நினைத்ததைச் சொன்னதால் அவர்கள் மிகவும் மதிக்கப்படுகிறார்கள் என்று அவர் வாதிடுகிறார். அவர்கள் மற்றவர்களின் வார்த்தைகள், புத்தகங்கள் அல்லது பாரம்பரியத்தை நம்பியிருக்கவில்லை. துரதிர்ஷ்டவசமாக, இன்று சிலர் அவ்வாறு செய்கிறார்கள்; அதற்கு பதிலாக, "அவர் தனது எண்ணத்தை கவனிக்காமல் நிராகரிக்கிறார், ஏனெனில் அது அவருடையது".

நாம் நமது சொந்த மனதைக் கேட்காவிட்டால், நாம் என்ன நினைக்கிறோம், உணர்கிறோம் என்பதை வேறு யாராவது சொல்வார்கள், மேலும் "மற்றொருவரிடமிருந்து நமது சொந்த கருத்தை வெட்கத்துடன் எடுத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படும்". இவ்வாறு எமர்சன் தனது வாசகருக்கு "உங்களை நம்புங்கள்" என்று பிரபலமாக அறிவுறுத்துகிறார்.

”உன்னையே நீ அறிவாய்” என்பது சாக்ரடீஸின் தவிர்க்க முடியாத ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஒலிக்க வேண்டிய நம்பிக்கைக் குரலாகும். நாம் யார் என்பதை அறிந்து தெளிவதற்கு முனையவேண்டும். அதற்கு நம்மைப் பற்றிய நம்பிக்கை என்பது ஆழ் நிலையில் உள்ள நான் என்கிற உணர்விற்குள் மறைக்கப்பட்டிருக்கும். அந்த மறைக்கப்படிருக்கிற நம்பிக்கையை கைப்பற்றி அழைக்க அது நம்மைப் பற்றிய முதல் அடையாளத்தை வெளிப்படுத்தும். மனித வாழ்வியலில் மனதளவில் கொள்ளும் ஊக்கம்தான் முதல் நம்பிக்கையாகும்.

அதனால்தான் வள்ளுவன் எவ்வளவு உயரம் நீர் உயர்கிறதோ அந்த அளவு தாமரை மலர் உயருவது போல நம் உள்ளத்தில் உள்ள ஊக்கத்தின் உயர்வே வாழ்வின் உயர்வாகும் என்கிறார்.

“வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு" (திருக்குறள் – ஊக்கமுடைமை -595)

மனதை ஊக்கப்படுத்துகின்ற பண்புகள் தோன்றிய பின்னர் எண்ணங்களை விதைக்கின்ற ஊற்றுகள் பெருகி அது செயலாகும்.ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கின்ற எண்ணங்களின் விளைவுகள் நம்மை நம்புவதன் மூலமே திட்ட வரையறையாக விளக்கப்படுகிறது. இதனை வள்ளுவன் எண்ணிய படியே செயல் ஆற்றுவதில் தீவிரமாக உள்ளவர்களால்தான் நினைத்த காரியத்தில் வெற்றி பெறமுடியும் என்கிறார்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின். (திருக்குறள் – வினைத்திட்பம்-666)

எண்ணங்களின் வடிவம் சொல்லாக உயர்ந்து நம்மை பல நிலையில் சிந்திக்கவும் செய்லாற்றவும் தூண்டுகிறது. நாம் வெல்வதற்கான ரகசியங்கள் நம் சொல்லுக்குள்ளேயே இருக்கிறது, நாம் தேர்ந்தெடுக்கும் சொல் யாராலும் மறுக்க முடியாத ஏற்றுக்கொள்ளக்கூடிய சொல்லாக இருக்கவேண்டும். நாம் என்கிற உண்மைத் தன்மையின் தனிப்பெரும் தகுதியாகவும் சொல் இருக்கவேண்டும்.இதனை வள்ளுவம்

"சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல், அச்சொல்லை
வெல்லும் சொல் இன்மை அறிந்து" திருக்குறள் -சொல்வன்மை-645 என்கிறது.

<u>"பின்பற்றுதல் என்பது தற்கொலை"</u>

ஒரு கட்டத்தில், ஒவ்வொருவரும் ஒன்றைப் "பின்பற்றுதல் என்பது தற்கொலை" என்பதை உணர்கிறார்கள். ஒருவரின் சொந்த உணர்வுத் திறன்களும் படைப்பாற்றலும் மிக முக்கியமான வரங்களாகும், மேலும் நம் மனதுக்கு நெருக்கமான செயல்களில்தான் முழுமையான மகிழ்ச்சி உள்ளது.ஆளுமைகள் தங்கள் செல்லும் வழிக்கான முழுத்திறைனையும் தன்னிலிருந்தே தேடிக் காண்கின்றனர்.விலங்குகளும் குழந்தைகளும் கூட தன் மனம் பற்றிய நம்பிக்கையில் உறுதியாக இருக்கின்றன என்பது எமர்சனின் வாதம் வள்ளுவரும் தனக்கான தனித்துவத்தை ஓவ்வொருவரும் கொண்டு இயங்குகின்ற தன்மையை ஆதரிக்கின்றார். ஒரு செயலைச் செய்வதற்கு மிகவும் அரியது என்று கருதி மனம் தளர்ந்து விடக்கூடாது.விடாமுயற்சியுடன் செய்யும் செயலானது வெற்றியைத் தரும்.

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும் (திருக்குறள் – ஆள்வினையுடைமை-611)

**இணக்கமின்மை**

எமர்சன் ஒரு மனிதன் இன்னொரு மனிதனைப் பின்பற்றுவதற்கான வரையறை அவன் உருவத்தில் இல்லை அவர்கள் செயலில் உள்ளது.அவர்களை வணங்குவதும்அவர்கள் செயலைப் போற்றி வாழ்வதும் தற்சார்பிற்கு எதிரானது.அவர்களின் செயலில் உள்ள தீவிரத்தை மற்றுமொரு வழியில் வெளிப்படுத்தி தனக்கான அடையாளத்தைப் புதுவிதமாக வெளிப்படுத்துதே இணக்கமின்மையாகும் என்கிறார்.

"ஒரு தனி மனிதன் தமது சொந்த விதிமுறைகளின் அடிப்படையில் சிறந்தவராக இருப்பதை நோக்கமாகக் கொள்ள வேண்டும்; வெற்றி பெற்றவர்களின் முகவரியில் மூழ்கிப்போவதை விடவேண்டும். எவ்வளவு அற்புதமான கட்டிடம், புத்தகம், அல்லது கலைப்பணி இருந்தாலும், ஒருவர் அதனால் மெய்மறந்து போகாமல், அதை மதிப்பீடு செய்து ரசிக்க வேண்டிய பொருளாகக் கருத வேண்டும். பொதுவாக மக்கள் அலெக்சாண்டர் போன்ற அரசர்களுக்கு மிகுந்த மரியாதை செலுத்தியுள்ளனர்; ஆனால் கற்றுக்கொள்ள வேண்டிய சிறந்த பாடம், அத்தகையவர்களை வணங்குவது அல்ல, உலகை நோக்கும் அவர்களின் அணுகுமுறையைத் தழுவுவதுதான்"

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

மனிதனில் பலர் தங்களுடைய தனித்திறனை வெளிப்படுத்துவதில் ஆர்வம் காட்டாமல் புகழ்பெற்றவர்களின் சிம்மாசனத்தை அலங்கரிப்பதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர்.இதனால் உலகியலுக்குக் கிடைக்கவேண்டிய ஒட்டுமொத்த சிந்தனைகளும் ஒரு சிலருக்கு மட்டுமே வாய்க்கின்றது.

வள்ளுவன் சான்றோராக வாழ்வதைத் தன் கொள்கையாகக் கொண்டிருப்பவர்களுக்கு நல்லவை அனைத்தும் செய்யத்தக்க கடமைகளாகவே அமையும் என்கிறார்.

கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள்ப வர்க்கு" (குறள் 981)

இயற்கை ஒரு மனிதனுக்குத் தேவையானவற்றைக் கொடுக்கத் தவறுவதில்லை . இயற்கையை மீறி நாம் எதையும் அடைந்து விட முடியாது. இக்கருத்தை,

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"

என்று வள்ளுவர் கூறுவது மனித வாழ்வின் தனித்துவ அடையாளத்தைத் தக்க வைக்கின்ற இயற்கையின் வலிமையை நமக்கு போதிக்கின்றது.

<u>தனித்துவ அடையாளம் அல்லது தற்சார்பின் ஆதாரம்</u>

தனிநபர் எவ்வாறு தன்னம்பிக்கையை அடைய முடியும் என்பதை எமர்சன் விளக்குகிறார்.

- ✓ முன்பு குறிப்பிட்டபடி, உண்மையான சிந்தனையுடனும் செயலுடனும் தன்னம்பிக்கையுடன் வாழ, ஒருவர் "உங்களை நம்ப வேண்டும்".
- ✓ வேறு வார்த்தைகளில் கூறுவதானால், எமர்சன் அழைக்கும் சுதந்திரத்திற்கான நமது உள்ளார்ந்த திறனின் தன்மை மற்றும் சக்தியை ஒருவர் நம்ப வேண்டும்,
- ✓ இந்த தன்னிச்சையான அல்லது உள்ளுணர்வு மற்றவர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளும் இரண்டாவது அறிவு, இதையொட்டி, எமர்சன் தங்கள் ஆன்மாவிற்கும் தெய்வீகத்திற்கும் இடையிலான உறவிலிருந்து தங்கள் உள்ளுணர்வு வெளிப்பட்டது என்று நம்பினார் (i.e., கடவுள்) உங்களை நம்புவது என்பது கடவுளை நம்புவதையும் குறிக்கிறது.

அதனால்தான் திருவள்ளுவர் குறளின் தொடக்கத்தைக் கடவுள் நிலையிலிருந்து தொடங்கியிருக்கிறார்.அகரம் எழுத்துக்கெல்லாம் முதலாவது போல இந்த உலகமும் இறைவனை முதலாகக் கொண்டது. இதனை குறள்

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" (குறள் 1, கடவுள் வாழ்த்து) என்கிறது.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**உள்ளுணர்வு**

மற்றவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதும், சில அறியப்பட்ட அல்லது பழக்கமான வழிகளின்படி வாழ்வதும் மிகவும் எளிதானது. தன்னம்பிக்கை கொண்ட வாழ்க்கை முற்றிலும் விசித்திரமானதாகவும் புதியதாகவும் இருக்கும். இது உதாரணம் மற்றும் அனுபவத்தை விலக்கும். மனிதன் பயப்படுகிறான் மற்றும் மன்னிப்புக் கேட்கிறான்; அவன் இனி நேர்மையானவன் அல்ல; "நான் நினைக்கிறேன்", "நான் இருக்கிறேன்" என்று சொல்லத் துணியவில்லை, இயற்கையுடனும் கடவுளுடனும் நிகழ்காலத்தில் வாழ, ஒருவர் கடந்த காலத்தைப் பற்றியோ எதிர்காலத்தைப் பற்றியோ கவலைப்படவோ, தன்னை மற்றவர்களுடன் ஒப்பிடவோ அல்லது வார்த்தைகள் மற்றும் எண்ணங்களை நம்பவோ கூடாது.

இத்தன்மை நாம் யார் என்பதை நாமே புரிந்து கொள்ளக்கூடிய குறியீட்டு மொழியாக நம்மிடமே உள்ளது. நம்மைப்பற்றிய சுயத்தை அறிய தன்னிச்சையாக செயல்படக்கூடிய திறனை நம் ஆன்மா பெற்றிருக்கிறது.

எமர்சன் ஒருவர் நம்ப வேண்டிய சுயத்தின் ஆதாரம் பொதுவாக தன்னிச்சை, உள்ளுணர்வு அல்லது உள்ளுணர்வு என்று அழைக்கப்படுகிறது. இதை ஆன்மா என்றும் விவரிக்கலாம். நூல்கள், போதனைகள் மற்றும் மரபுகளை நாடாமல், ஒருவர் நீதியையும் ஞானத்தையும் பகுத்துணர்ந்து கடவுளிடமிருந்து நேரடியாக உத்வேகம் பெறுவதற்கான வழிமுறையாகும் என்கிறார்.

பிறவியை அனுபவிக்கின்ற ஆன்மா தன் உண்மையறிவை அறிகின்ற செம்பொருளைத் தன்னிலிருந்தே விளைவிப்பதுதான் மெய்யறிவாகும் என்ற குறளை

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு" (குறள் 358) என்ற பொருண்மையில் உணரற்பாலது.

ஆன்மா என்பது உடல் கூட்டில் இருந்தாலும் தனக்கான ஞானத்தைத் தெளிந்ததாகவே தருகிறது.இதனை எமர்சன்

"ஆன்மா பயணி அல்ல; ஞானி வீட்டிலேயே இருக்கிறார்" என்று கூறுகிறார்.

ஆன்மா அழியாதது.வேறு வேறு உடலோடு பிறப்பு இறப்பாகிய தன்மையைப் பெறுகிறது. பிறப்பும் இறப்பும் உயிருக்கான உடலைக் கொடுத்து மறுபடியும் எடுக்கின்ற சுழற்சி நிலைக்குட்பட்டது.இதனை வள்ளுவம்

"உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலுஞ் பிறப்பு." (குறள் 339) என்கிறது.

ஆன்மா விழிப்புணர்வு பெறவில்லையென்றால் இந்த உடலில் உள்ள உறுப்பால் எந்தப்பயனும் இல்லை என்பது வள்ளுவரின் கருத்தாகும்

"புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு." (குறள் 78)

மனிதனின் அறம் மற்றும் ஒழுக்கத்தின் வழியிலிருந்தே ஆன்மாவை உயர்த்துவதுதான் வாழ்வின் நோக்கம் என்பதையே வள்ளுவர் மற்றும் எமர்சனின் கருத்தும் விளக்குகின்றன.

தனித்துவம் (Individual Uniqueness)

தனித்துவம் (Individual Uniqueness) என்பது ஒவ்வொரு மனிதனும் தன்னுள் இருக்கும் தனித்துவமான திறமை, அறிவு மற்றும் பண்புகளை உணர்ந்து, அதற்கேற்ப செயல்படுவதைக் குறிக்கும். இதை வலியுறுத்தும் விதமாக வள்ளுவர் 'தன்னை அறிதல்' (சுய அறிவு) மற்றும் 'தெரிந்து செயல்வகை' என்ற இரண்டு அதிகாரங்களை வறையறை செய்கிறார். மனிதன் தான் வளர்த்துக் கொள்ளும் பண்புகள் மற்றும் செய்யும் செயல்கள் மூலமே அவர்களின் தனித்துவத்தை அளக்க வேண்டும் என்பது வள்ளுவத்தின் அளவிகோல் ஆகும் இக்கோலையே எமர்சனும் ஊன்றும் போது மொழி இரண்டானாலும் சிந்தனையால் ஒன்றுபடும் மன நிலையை வியக்கலாம்.

“மிக உயர்ந்த உண்மையையும் மிகப் பெரிய நன்மையையும் புத்தகங்களிலிருந்தோ ஆசிரியர்களிடமிருந்தோ கற்றுக்கொள்ள முடியாது. இத்தகைய உன்னதமான விஷயங்களை வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாது, அதனால்தான் "தன்னம்பிக்கை" என்ற சொல் போதுமானதாக இல்லை. ஆனால் தனிமையும் சிந்தனையும் தேவை. பிரசங்கம் தொடங்குவதற்கு முன்பு ஒரு தேவாலயத்தின் அமைதி பிரசங்கத்தை விட அதிக மதிப்புடையது”. இந்த எமர்சனின் கருத்தை வழியொட்டியே வள்ளுவரும் கற்க வேண்டிய ஞானங்களைக் கற்று அதன் உண்மைப் பொருளை உணர்ந்தவர்கள் பிறவியென்ற துன்ப நிலையிலிருந்து விடுபடுவர் என்கிறார்.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி" (குறள் 356)

தனித்துவமும் சமூகப் பயன்பாடும்

எமர்சன் சுயநம்பிக்கை வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று வாதிடுகிறார், மேலும் அத்தகைய நடைமுறை சமூகத்திற்கு எவ்வாறு பயனளிக்கும் என்பதையும் விளக்குகிறார். “ஒரு அதிகமான சுயநம்பிக்கை மனிதர்களின் அனைத்து பதவிகளிலும் மற்றும் உறவுகளிலும் ஒரு புரட்சியை உருவாக்கும் என்பதை எளிதாகக் காணலாம்; அவர்களின் மதத்தில்; அவர்களின் கல்வியில்; அவர்களின் முயற்சிகளில்; அவர்களின் வாழ்வியல் முறைகளில்; அவர்களின் சங்கங்களில்; அவர்களின் சொத்துகளில்; அவர்களின் தத்துவக் கருத்துகளில்.” என்கிறார்.

வாழ்க்கையில் சுய நம்பிக்கை என்பது ஒரு குறிப்பிட்ட நோக்கங்களில் மட்டுமன்றி எல்லா பன்புகளில் வெளிப்படுத்தப்படவேண்டும். அது கண்மூடித்தனமான நம்பிக்கைகளில்

வெளிப்படுவதல்ல.உண்மையான தேடலில்தான் நிறைய நம்பிக்கைகள் வெற்றிபெறுகின்றன.

மனிதனின் பகுத்தறிவுப் பண்பில்தான் சுய நம்பிக்கை வெளிப்படும்.இதனையே வள்ளுவர் எந்தவொரு செய்தியை எவர் சொன்னாலும், அதை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் அதன் உண்மைத் தன்மையை ஆராய்ந்து அறிவதே சிறந்த அறிவாகும் என்கிறார்

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு" திருக்குறள் அறிவுடைமை -423

கடவுள் நம்பிக்கை என்பது கண்மூடித்தனமான வாழ்வியல் சடங்குகளால் ஆனதல்ல.அது துன்பத்தை எதிர்க்கின்ற வலிமையால் உண்டான பிரார்த்தனைப் பண்பாகும்.இப்பண்பால்தான் மனிதமனம் தன்னை கட்டுப்படுத்துகின்ற ஆற்றலை வளமைப்படுத்தவல்லது.

இப்பண்பை எமர்சன் உண்மையான பிரார்த்தனை என்பது துன்பத்தையும் நம்பிக்கையின்மையைத் தவிர்ப்பதைக் கொண்டதாகும் என்று நம்புகிறார்; இவை ஒருவரின் "செயல்மனத் தளர்ச்சி"யைக் குறிக்கின்றன. அதேபோல், பிறரின் துன்பத்திற்கு அளவுக்கு மீறிய இரக்கம் காட்டுவதும் அவர்களுடைய தளர்ச்சியை நீடிக்கச் செய்வதாகும்; அதற்குப் பதிலாக, உண்மை மற்றும் ஆரோக்கியமான அணுகுமுறையுடன் அவர்களை மீண்டும் அவர்களின் புத்திக்குத் திருப்ப வேண்டும் என்கிறார்.

ஒருவரின் மனதை மாற்றுகின்ற இயல்பான வாழ்வியல் பண்பை இயற்கைத் தன்னகத்தே கொண்டுள்ளது. நேற்றைய காலத்தின் வீழ்ச்சியைத்தான் இன்றைய நாள் தொடங்கி இயக்குகிறது. புதுமை என்பது காலத்தின் நியதியாக இருப்பது போல மனிதனுக்குள்ளும் காலத்தின் மாற்ற இயல்பை உணர்ந்து செயலாற்றுகின்ற வல்லமை உள்ளது.இதனை வள்ளுவம்

"செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்

செயற்கரிய செய்கலா தார்" (திருக்குறள் நீத்தார் பெருமை -26) என்கிறது.

மதக் கோட்பாடுகள் குறித்து பேசும்போது, மதத்தைக் கட்டிப்பிடித்து இருப்பவர்கள் தங்களுடைய சிந்தனையை விட சக்திவாய்ந்த வேறு ஒருவரின் நம்பிக்கைகளைப் பின்பற்றுகிறார்கள்; கடவுள் தங்களது மனதின் வழியாக எவ்வாறு பேசுகிறார் என்பதைக் கேட்பதில்லை என்பதே அவரது விமர்சனத்தின் மையமாகும். இவ்வாறு, அவர்கள் பிரபஞ்சத்துடனும், கடவுளுடனும் உள்ள தொடர்பை இழக்கிறார்கள், ஏனெனில் அந்தக் கோட்பாடே பிரபஞ்சமாகத் தவறாக எண்ணப்படுகிறது என்பது எமர்சனின் கருத்து.

சமயச் சார்பற்ற, உயரிய பண்புகளைக் கொண்ட ஒரு இறைக்கொள்கையையே வள்ளுவம் கூறுகிறது.கடவுள் என்ற ஒன்றுதான் உலகத்தை இயக்குகிறது என்பது வள்ளுவரின் வாதமாகும் .அது பெயரளவிலும் சொல்லளவிலும் தோற்றுவிக்கமுடியாத ஆனால் நம்மைத்

தோற்றுவித்த ஓர் அரிய உயரிய பொருளாகும்.அவரவர் உணர்கின்ற தன்மையால்தான் கடவுளைப் புரிதல் முடியும் என்கிறது வள்ளுவம்.இந்த உலகத்துக்குத் தோற்றுவாயாக இருப்பது கடவுள்தான். கடவுளை பகுத்து அறிந்தவனை நாடி புரிந்துகொள்ளல் வேண்டும். கடவுளை அறிந்தவன், மலராகிய உபதேசப் பொருளில் நின்று வாழ்வான். தேவையானவர் - தேவை அற்றவர் என்ற பாகுபாடுகளை கடந்தவனே குருவாய் வந்து நம்மை ஆட்கொள்வான்.அவனே குரு. அறியாமையை உண்டாக்கும் இரு வினைகளாகிய நல்வினை தீவினை கடந்தவனே இறைமையைப் புரிந்து புகழை அடைகிறான். ஐம்பொறிகளுகளைக் கடந்து பொய் அற்று வாழ்பவன், சிறந்த மெய்மை வாழ்வை அடைவான். அறமுடன் இருப்பவரை அறிந்தால், பிறவித் துன்பம் நம்மை விட்டுப் போகும். பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க இறைவனின் துணை அவசியமாகும்.இவையெல்லாம் வள்ளுவம் கடவுள் பற்றித் தரும் உயர்ந்த ஞானமாகும்.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்" (திருக்குறள் கடவுள் வாழ்த்து-3)

"இருள்சேர் இருவினையும் சேராஇறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (திருக்குறள் கடவுள் வாழ்த்து-5)

ஒரு குறிப்பிட்ட சமயச் சார்புடைய எந்த சொல்லாட்சியும் இல்லாத அனுபவ வாழ்வின் ரகசியத்தையே வள்ளுவரும் எமர்சனும் கடவுள் என்கின்றனர்.

மனித வரலாற்றில் கல்வி என்பது பல்வேறு பரிணாம வளர்ச்சியில் பயணித்து புதிய நெறியையும் கோட்பாடுகளையும் தோற்றுவித்துக்கொண்டே இருக்க வேண்டும். மனிதனின் முழுமையான வளர்ச்சிக்குக் கல்வி அவசியமாகும்.

*"கல்வி எனும் ஊடகமானது, மனிதன் தம்முடைய சமுதாயப் பண்பாடுகளை வெளிப்படுத்தவும்; அதனை வளர்க்கவும், பல்வேறு அறைகூவல்களை ஏற்கவும், மற்ற பண்பாடுகளைத் தனதாக்கிக் கொள்ளவும் கல்வி பயன்படுகிறது. இவ்விதக் கல்வி தேசிய ஒருமைப்பாட்டிற்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் உருக்கொடுப்பதாக அமைகின்றது"* (தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம், வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-13, ப.706).

கல்வி என்பது மற்றவர்களின் புதிய கண்டுபிடிப்புகளைப் பின்பற்றுவதற்கான பாதைகளை வகுப்பதோடு மட்டுமல்லாமல் ஒன்றை மற்றொன்றாக மாற்றித் தன்னைப் புதுப்பிக்க முயற்சிசெய்து கொண்டே இருக்கிறது.அது மனித மனத்துக்குள்ளே சென்று ஊடுறுவுவதில்லை என்பதுதான் எமர்சனின் வாதம்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

“கல்வியைப் பற்றி எமர்சன் கூறுவதாவது, கல்வி அமைப்பு அமைதியற்ற மனதை உருவாக்குகிறது; இதனால் மக்கள் தங்களுக்குள் இருந்து விலகி, தாங்கள் அறிந்ததையோ பெற்றதையோ விட உயர்ந்த ஏதோ ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் அலைகிறார்கள். கல்வி பெற்ற அமெரிக்கர்கள் இத்தாலி, இங்கிலாந்து, எகிப்து போன்ற வெளிநாடுகளுக்கு பொழுதுபோக்கும் கலாச்சார அனுபவத்திற்கும் பயணம் செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் தங்கள் வீடுகளை வெளிநாட்டு ருசிக்கு ஏற்ப கட்டி அலங்கரிக்கிறார்கள்; தங்கள் மனங்களை கடந்த காலத்துக்கும் தூர இடங்களுக்கும் திருப்புகிறார்கள். கலைஞர்கள் டோரிக் அல்லது கோத்திக் வடிவங்களைப் பின்பற்றுகிறார்கள். இருந்தாலும், எமர்சன் நமக்கு நினைவூட்டுகிறார்: “இங்கிலாந்து, இத்தாலி, அல்லது கிரீஸை கற்பனையில் மதிப்புக்குரியதாக ஆக்கியவர்கள், அவர்கள் இருந்த இடத்திலேயே பூமியின் அச்சைப் போல உறுதியாக நிலைத்திருந்ததாலேயே அதைப் பெற்றார்கள்.” ஒருவர் தமக்குத் தொடர்பற்ற வெளிநாட்டு விஷயங்களை ஏங்கவோ பின்பற்றவோ கூடாது; ஏனெனில் “உங்கள் சொந்த வரத்தை நீங்கள் ஒவ்வொரு கணமும் முழு வாழ்க்கைப் பயிற்சியின் கூட்டு வலிமையுடன் வழங்க முடியும்; ஆனால் மற்றொருவரிடமிருந்து ஏற்றுக்கொண்ட திறமை உங்களிடம் தற்காலிகமான அரை உரிமையாக மட்டுமே இருக்கும்.ஒவ்வொரு மகத்தான மனிதரும் தனித்துவமானவரே.”

கற்றவனின் மனமே ஊற்றாக இருந்து அறிவை வளப்படுத்தும் ஆற்றல் உடையது.எவ்வளவுக்கெவ்வளவு தோண்டுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு மணற்கேணியில் நீர் ஊறுவதைப் போல் எவ்வளவுக்கெவ்வளவு கல்வி கற்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அறிவு பெருகும்.இதனை வள்ளுவர்

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்து ஊறும் அறிவு (396) என்கிறார்.வள்ளுவரின் கருத்தையொட்டியே எமர்சனும் அடுத்தவர்களிடமிருந்து கற்ற ஆற்றலை விட நம்மிலிருந்து ஊறும் ஊற்றே நமக்கு சரியான வழிகாட்டியாய் இருந்து செயல்படுகிறது என்கிறார்.

கல்வி இல்லாமல் இருக்கக் கூடாது. எவ்வளவு படித்தாலும் நல்லது என்பதல்ல எத்தனை மொழிகளைப் படித்தாலும் நல்லது தான் எந்த நாடும் சொந்த நாடாகும் படியும் எந்த ஊரும் சொந்த ஊராகும் படியும் பல நாட்டு மொழிகளிலும் உள்ள பற்பல நூல்களையும் சாகிறவரையிலும் ஒருவன் படித்துக் கொண்டே இருந்தால் தான் அவனை அவன் வெல்லமுடியும்.இதனை

யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு (*397*)

என்ற குறளின் வழி அறியலாம்.

இறுதியாக, எமர்சன் “சமூகத்தின் உயிர்” பற்றி பேசுகிறார். எமர்சனின் கருத்துப்படி,

நாகரிகம் சமூக முன்னேற்றத்தை உருவாக்கவில்லை; ஏனெனில் புதிய கலைகளும் தொழில்நுட்பங்களும் கிடைக்கும் போது பழைய இயல்பான உள்ளுணர்வுகள் இழக்கப்படுகின்றன. உதாரணமாக, "நாகரிகமான மனிதன் ஒரு வண்டியை உருவாக்கியிருக்கிறான்; ஆனால் தனது கால்களின் பயன்பாட்டை இழந்துவிட்டான்.அவனிடம் அழகான ஜெனீவா கடிகாரம் உள்ளது; ஆனால் சூரியனைப் பார்த்து நேரத்தை அறியும் திறனை இழந்துவிட்டான்." சமூகம் அலைபோல் மாற்றமடைந்து நகர்கிறது. "ஒரு அலை முன்னேறினாலும்… அதை அமைத்துள்ள நீர் முன்னேறுவதில்லை." ஆகவே, மக்கள் அவர்கள் முன்பு இருந்ததைவிட உயர்ந்தவர்கள் அல்ல; கடந்த கால கலை மற்றும் அறிவியல் சாதனைகளின் புகழில் தன்னடக்கமின்றி ஓய்ந்து கிடக்கக் கூடாது. அதற்கு பதிலாக, அவர்கள் சுயநம்பிக்கையை அடையச் செயலில் ஈடுபட வேண்டும்; அதாவது தமக்குள் திரும்பிச் செல்வதும், மத, கல்வி, மற்றும் சமூக நிறுவனங்கள் உருவாக்கும் சொத்துகளின் (அதாவது, தன்மையிலிருந்து வெளிப்பட்ட பொருட்களின்) மீது பலவீனப்படுத்தும் சார்பிலிருந்து விடுதலை பெறுவதுமாகும். மேற்கண்ட எமர்சனின் கருத்து புதிய உள்ளீடுகள் சமூகத்தை அழிவிற்குள் செலுத்துவதோடு மனிதமனங்களின் தனித்துவ ஆற்றலை செயல்படுத்தாமல் தடுக்கிறது என்கிறார்.

காலத்தின் கோடுகள் நவீனத்தின் பாதிப்பால் அழிந்துகொண்டு இருக்கிறது.சமூகத்தைத் தீயவையாகிய தீ தொழில் நுட்பம் என்ற பெயரால் எரித்து சாம்பலாக்கிக் கொண்டிருக்கிறது.இதனை வள்ளுவம் உணர்ந்து

*தீயவை தீய பயத்தலால் தீயவை*
*தீயினும் அஞ்சப் படும்."* (குறள் 202) என்று கூறுகிறது.

அதாவதுதீய செயல்கள் தீய விளைவுகளையே தரும் என்பதால், தீயை விடக் கொடியதாகக் கருதி அதற்கு அச்சப்பட வேண்டும். இக்குறள் சமூகத்தில் உள்ள தீய பழக்கங்களில் இருந்து விலகி இருக்க விழிப்புணர்வைத் தருகிறது.

"ஒரு நாட்டில் இயற்கை வளங்கள் மிக்கயிருந்தாலும் அவற்றைப் பயன்படுத்தி நலம் பெற மக்களிடம் விழிப்புணர்வு என்ற கருத்துநிலைத் தேவைப்படுகிறது" (ம.திருமலை, ஒப்பிலக்கிய கொள்கைகளும் பயில் முறையும் பக்கம் - 212).

மனிதனின் வாழ்க்கை என்பது சமூகத்துடன் இணைந்த அமைப்பாக விளங்குகிறது.

எமர்சன் முடிவில் கூறுகிறார்: "உங்களுக்கு அமைதியை வழங்க இயலுவது உங்களையே தவிர வேறு எதுவும் இல்லை "

**முடிவுரை**

"தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை" என்பது திருமூலர் வாக்கு.ஒருவர் தன்னை உணர்கின்ற ஆற்றலைப் பெற்று விட்டால், அவருக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது. தன்னை அறியாமல் வாழ்பவர்கள் வீணாகக் கெடுகிறார்கள்.உள்முகமாகத் தன்னை நோக்கிய

<u>பயணமே நம் உண்மையான இயல்பை உணர்த்தும்.மனிதவாழ்வியலின் சிக்கல்களை மொழிக்கூட்டுக்குள் இருந்து விலக்கிய இருவேறு ஆளுமைகளின் கருத்தியல் சிந்தனை அளவில் ஒன்று பட்டிருக்கின்றது.</u>